A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
–Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru–vi–ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

## முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்

**<u>மேல்முறையீட்டு மனு எண் 70 / 2023</u>**

திரு G. மதன்,
39/1, மாம்பழப்பட்டு ரோடு,
விழுப்புரம் மாவட்டம் – 605 002.

………மேல்முறையீட்டாளர்
(திரு G. மதன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ விழுப்புரம்,
விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10, பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம் – 605 602.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / கிராமம்/ விழுப்புரம்,
விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
401, 1, ADL வளாகம், திருச்சி மெயின் ரோடு,
வழுத்தாரேட்டி, விழுப்புரம் – 605 602.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / ஜானகிபுரம்,
விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஆவின் பால் நிலையம் அருகில், விழுப்புரம்.

. . . எதிர்மனுதாரர்
(திரு S. செந்தில்நாதன், செயற்பொறியாளர்/ இ&ப/ விழுப்புரம்
திரு G.கார்த்திக், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / கிராமம்/ விழுப்புரம்
திரு A. சண்முகம், உதவி மின்பொறியாளர்/ இ&ப / ஜானகிபுரம்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 04-09-2023</u>**

**<u>கேட்புரை நாள்: 22-11-2023</u>**

**<u>ஆணை நாள்: 29-11-2023</u>**

13.09.2023 அன்று பெறப்பட்ட திரு G. மதன், 39/1, மாம்பழப்பட்டு ரோடு, விழுப்புரம் மாவட்டம் – 605 002 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 70/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 22.11.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

புதிய தொழிற்சாலை மின் இணைப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதால் இழப்பீடு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தொழிற்சாலை மின் இணைப்பு வேண்டி அதற்குறிய கட்டணம் அனைத்தையும் செலுத்திய பின்பும் மின் இணைப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு இழப்பீடு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மின்மாற்றி கட்டமைப்பு வேலைகள் முடிவடைந்து மின்மாற்றி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி வரிசையின்படி நேரம் ஒதுக்கீடு செய்து மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 காலதாமதமாக வழங்கப்பட்ட மின் இணைப்பால் ஏற்பட்ட பாதிப்பிற்கு இழப்பீடு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விழுப்புரம் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 17.05.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் 30.06.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 விழுப்புரம் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.06.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *புதிய தொழிற்சாலை மின் இணைப்பு மின்மாற்றி அமைத்து வழங்கிட ஏற்பட்ட காலதாமதத்தால் மனுதாரர் கோரும் இழப்பீடு ரூ.1,00,000/- (ஒரு லட்சம் மட்டும்) தொழில் இழப்பிற்கும் மற்றும் கடனுக்கான வட்டிக்காகவும் வழங்க வேண்டும் என கோருவது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி வழங்கிட வழிவகை இல்லை என்பதால் மனுதாரரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என இம்மன்றம் தீர்வு செய்கிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 22.11.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு G. மதன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு S. செந்தில்நாதன், செயற்பொறியாளர்/ இ&ப/ விழுப்புரம், திரு G.கார்த்திக், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / கிராமம்/ விழுப்புரம் மற்றும் திரு A. சண்முகம், உதவி மின்பொறியாளர்/ இ&ப / ஜானகிபுரம், விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள்

முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திரு.ஜி.மதன் அவர்கள் தொழிற்சாலை மின் இணைப்பு வேண்டி 04-03-2023 தேதியில் விண்ணப்பம் செய்து அதற்கான கட்டணம் அனைத்தையும் செலுத்தியுள்ளதாகவும், அதிகபட்சம் 90 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் தான் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு மின் இணைப்பிற்காக காத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படாததால் இது சம்பந்தமாக மின் துறை அலுவலர்களை பலமுறை நேரில் கேட்டும் மின்மாற்றி இருப்பு இல்லாததால் மின் இணைப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக தெரிவித்தனர் என்றும் முதல்வரின் முகவரி துறைக்கு மனு செய்ததில் உதவி மின் பொறியாளர் 24.04.2023 பதில் கடிதத்தில் மின்மாற்றி கட்டமைப்பு வேலைகள் முடிந்து விட்டதாகவும் மின்மாற்றி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று முதல்வரின் முகவரி துறைக்கு மேல்முறையீடு செய்யப்பட்டதின் பேரில் மேற்பார்வை பொறியாளரின் 24.05.2023 கடிதத்தில் மின் மாற்றி ஒதுக்கீடு கோரி தலைமையகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதும் மின் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் எந்த அலுவலரும் எப்போது மின் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படவில்லை எனவும், அதிகபட்ச காலமான 90 நாட்களை கடந்தும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், மின்வாரியம் குறிப்பிடும் கட்டணங்களை சரியான முறையில் செலுத்திவிட்டு மின் இணைப்பிற்கு எவ்வளவு நாட்கள் காத்திருக்கமுடியும் எனவும், மின் கட்டணங்களை குறிப்பிட்ட கால அளவுக்குள் செலுத்தவில்லை என்றால் அபராதம் மின் துண்டிப்பு மறு இணைப்பு கட்டணம் என்று அனைத்திற்கும் மின்வாரிய சட்டம் தெளிவாக பாதுகாப்பு

செய்யப்பட்டுள்ளதாகவும், நுகர்வோருக்காக எந்த பாதுகாப்பும் வழங்கப்படவில்லையா? முறைப்படி குறிப்பிட்ட காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்படாததால் பெரும் பொருளிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் பெறப்பட்ட கடன் தொகைக்கு தொழில் செய்யாமலே வட்டி கட்டும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கபடாததற்கு கூறப்பட்ட காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அனைத்து கட்டணங்களையும் பாக்கியில்லாமல் பெற்றுக் கொண்டு மின் இணைப்பு வழங்க இயலாதது மின்வாரியத்தின் அலட்சியத்தை காட்டுகிறது எனவும், தான் தன்னுடைய சொந்த செலவில் மின்மாற்றி வாங்கி தருவதாக தெரிவித்தும் அதற்கும் ஒத்துக்கொள்ளவில்லை எனவும், மின்மாற்றி ஒதுக்கீடு 19.06.2023ல் கிடைக்கப்பெற்றும் மின் இணைப்பு வழங்க மேலும் நான்கு நாட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும், 22.6.2023 மாலை 3.00 மணிக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், நுகர்வோருக்கு சேவை செய்வதில் எவ்வளவு அலட்சியம் காட்டப்படுகிறது எனவும், எனவே தன்னுடைய தொழில் இழப்பிற்கும் கடனுக்கு வட்டிக்காகவும் ஒரு லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று குறைதீர் மன்றத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்து விழுப்புரம் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 17.05.2023 தேதியில் மனு செய்திருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மனு எண் 08–2023 நாள் 30.06.2023 அன்று கேட்புரை நடைபெற்றதாகவும், தான் தன்னுடைய தரப்பு தகவல்களை எழுத்து மூலம் கொடுத்திருந்ததாகவும், எந்த ஒரு சிறு விசாரணையும் செய்யப்படாமல் இது மேலிடத்து பிரச்சனை எனவே எங்களால் எந்த பதிலும் சொல்ல இயலாது என்று தன்னை அனுப்பிவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 30.06.2023 தேதியிட்ட மன்ற தீர்வு கடிதம் மிகவும் கவனமாக மேல்முறையீட்டு காலமான நாற்பது நாட்கள் கடத்தப்பட்டு 10.08.23 தேதியில் தனக்கு கிடைக்கபெற்றதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 தாழ்வழுத்த மின் இணைப்பு மின்மாற்றி அமைத்து அளித்திட அதிகபட்சம் 90 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், கால அவகாசம் என்பது அந்த குறிப்பட்ட காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை குறிக்கிறதாகவும், குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் மின் இணைப்பு வழங்காதது மின்வாரியத்தின் தவறு என்பதை முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும் எனவும், இதனால் நுகர்வோர் எவ்வாறு பாதிக்கப்படுவார் என்பதைப் பற்றி மின்வாரியம் கவலைப்படுவதாக தெரியவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மின் உரிமதாரர் தரப்பில் வேண்டுமென்றே காலதாமதம் செய்யப்படவில்லை என்பதும் எதிர்பாராத நிகழ்வுகளால் பகிர்மான கழகத்தின் தலைமையகத்தில் மொத்த கொள்முதல் செய்து ஒதுக்கீடு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக தீர்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மின் இணைப்பு விண்ணப்பங்கள் பெறப்பட்டு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டுவிட்டதும் நுகர்வோர் மின் இணைப்பு குறிப்பிட்ட காலத்திற்குள் கண்டிப்பாக கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டு குறிப்பிட்ட கால அளவுக்குள் உற்பத்தி துவங்காவிட்டால் ஏற்படும் நஷ்டங்களை கணக்கில் எழுத முடியாது எனவும், இணைப்பு கட்டணங்கள் பெறப்பட்டுவிட்டாலே மின் வாரியம் குறிப்பிட்ட கால அவகாசத்தில் மின் இணைப்பு வழங்க வேண்டும் எனவும், மின்மாற்றி கொள்முதல் தாமதம் மற்றும் ஏதேதோ காரணங்களை சொல்லி காலதாமதம் செய்வது சட்டப்படி தவறானது எனவும், நுகர்வோருக்கும் மின்மாற்றி கொள்முதல் மற்ற காரியங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லாதவை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 நுகர்வோர் மின்மாற்றி தன்னுடைய சொந்த செலவில் கொள்முதல் செய்து தருவதாக மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் அணுகியபோதும், அவ்வாறு செய்ய முடியாது என தெரிவித்துவிட்டதாகவும், மின் உரிமதாரர் மாற்று ஏற்பாடு செய்து மின் இணைப்பு வழங்குவதற்கு போதுமான அதிகாரங்கள் செந்தரங்கள் இருந்தும் தனது பொறுப்பை தட்டி கழித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மின் உரிமதாரர் தற்போது எதிர்பாராத காரணத்தால் சட்டப்படி சொல்லப்பட்டுள்ள காரியங்களை செய்ய முடியவில்லை என்று கூறமுடியாது, இதுவே நுகர்வோர்

மின்கட்டணங்களை குறிப்பிட்ட தேதியில் செலுத்த முடியாமல் போனபிறகு எதிர்பாராத காரணத்தால் மின் கட்டணம் செலுத்தவில்லை என்று கூறினால் மின் உரிமதாரர் ஏற்றுக்கொள்வாரா என்று சிந்திக்க வேண்டும் எனவும், மின் கட்டணங்களை குறிப்பிட்ட கால தவணைக்குள் செலுத்தி மின் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுங்கள் என்றும் சர்வர் பிரச்சனை மற்றும் கடைசி நேர நெருக்கடியை தவிர்த்து முன்கூட்டியே கட்டணத்தை செலுத்துங்கள் என மின் உரிமதாரர் அறிவிப்பு வெளியிடுகிறார், அதேபோல் நுகர்வோருக்கு குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் மின் இணைப்பு வழங்குவதில் அக்கறையை செலுத்தியிருக்க வேண்டும் எனவும், எந்த சட்டமும் கோரிக்கையும் நுகர்வோருக்கு மட்டுமே, மின் உரிமதாரர் விலக்களிக்கப்பட்டவர் என்றும் நடந்து கொள்ளக்கூடாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 உதவி மின் பொறியாளர் நுகர்வோருக்கு எழுதிய 24.04.2023 கடிதத்தில் மின்மாற்றி கட்டமைப்பு வேலைகள் முடிந்து விட்டதாகவும் மின்மாற்றி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்கப்படும் என்று தவறான தகவலை தெரிவித்துள்ளதாகவும், மின்மாற்றி ஒதுக்கீடு பெற்று 19.06.2023 அன்று மின்மாற்றி நிறுவப்பட்டுவிட்டதாகவும், ஆனால் கட்டமைப்பு வேலைகள் சரிவர முடியாததால் மின்மாற்றி கிடைத்தும் மின்சப்ளை வழங்க கூடுதலாக மூன்று நாட்கள் தாமதப்படுத்தப்பட்டதாகவும், இதிலிருந்து மின் உரிமதாரர் குறிப்பிட்ட அளவுக்குள் மின் இணைப்பு வழங்க அக்கறை காட்டவில்லை என்பது ஊர்ஜிதமாகிறது எனவும், எனவே மின் உரிமதாரரால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுளார்கள் எனவும், ஆகவே நுகர்வோருக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய வேண்டியது மின் உரிமதாரரின் கடமையாகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திரு.G.மதன் 39/1.மாம்பழப்பட்டு ரோடு விழுப்புரம் அவர்களுக்கு சொந்தமான B7 ஜானகிபுரம் தொழிற்பேட்டை கண்டமானடி விழுப்புரம் என்ற இடத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு புதிய தொழிற்சாலை மின் இணைப்பு வேண்டி 04.03.2023 அன்று இணையவழி மூலம் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளதாகவும், அவ்விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 06.03.2023 அன்று நேரடியாக கள ஆய்வு செய்து விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் 15.03.2023 அன்று

விண்ணப்பத்திற்கு உரிய மதிப்பீடு தயார் செய்து மேல் அனுமதிக்காக அனுப்பப்பட்டு மதிப்பீடு அனுமதி 29.03.2023 அன்று கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து புதிய மின் மாற்றி கட்டமைப்பு அமைக்கும் பணி தொடங்கி முடிக்கப்பட்டவுடன் புதிய மின் மாற்றி 200 KVA /22 KV ஒதுக்கீடு வேண்டி 17.04.2023 அன்று உதவி மின்பொறியாளர்/இபே/ஜானகி அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இந்நிலையில் திரு.மதன், த/பெ.கோடி, விழுப்புரம் அவர்கள் முதல்வரின் முகவரிக்கு இணைப்பு வழங்க வேண்டி புகார் அளித்த மனுவிற்கு 200 KVA /22 KV மின் மாற்றி ஒதுக்கீடு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், மின் மாற்றி ஒதுக்கீடு பெறப்பட்ட மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவல் விண்ணப்பதாரருக்கு 24.04.2023 நாளிட்ட கடிதத்தின் படி தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் 17.06.2023 அன்று திரு.G.மதன் 39/1.மாம்பழப்பட்டு ரோடு விழப்புரம் அவர்களுக்கு சொந்தமான 87. ஜானகிபுரம் தொழிற்பேட்டை கண்டமானடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்க 200 KVA/22 KV மின் மாற்றி ஒதுக்கீடு பெறப்பட்டது இதை தொடர்ந்து 19.06.2023 அன்று 200KVA/22 KV மின் மாற்றி பண்டகச்சாலையிலிருந்து எடுத்து வரப்பட்டு விண்ணப்பதாரரின் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்க புதியதாக அமைக்கப்பட்ட கட்டமைப்பில் நிறுவப்பட்டதாகவும், மேலும் 19.06.2023 அன்றே LTCT மின் அளவி சோதனை செய்து மற்றும் மின் இணைப்பு வழங்க MRT பிரிவு நேரம் ஒதுக்கீட்டிற்கு ஏற்பாடு செய்ய 19.06.2023 நாளிட்ட கடிதம் உதவி மின்பொறியாளர்/இபே/ஜானகிபுரம் பிரிவு அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் 20.06.2023 அன்று புதிய மின் மாற்றி கட்டமைப்புக்கும் அதில் நிறுவப்பட்ட மின் மாற்றிக்கும் தொடர்புடைய மின் விஸ்தரிப்பு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு மின் மாற்றி தயார் நிலையில் வைக்கப்பட்டதாகவும், 22.06.2023 அன்று MRT பிரிவு நேரம் ஒதுக்கீடு செய்து LTCT மின் இணைப்பு வழங்க LTCT மின் அளவி தொடர்புடைய அனைத்து சோதனைகளையும் நிறைவு செய்து திரு.G.மதன். 39/1. மாம்பழப்பட்டு ரோடு விழுப்புரம் அவர்களுக்கு சொந்தமான B7. ஜானகிபுரம்

தொழிற்பேட்டை கண்டமானடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு மின் இணைப்பு எண் 422-012-627 வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இவ்வாறாக பணிகள் முடிக்கப்பட்டு திரு.G.மதன். 39/1 மாம்பழப்பட்டு ரோடு விழுப்புரம் அவர்களுக்கு சொந்தமான B7. ஜானகிபுரம் தொழிற்பேட்டை கண்டமானடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதே தவிர வேண்டுமென்றே காலதாமதம் செய்யப்படவில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 விண்ணப்பதாரரின் விண்ணப்பம் 04.03.2023, தேதியிலிருந்து மத்திய பண்டக சாலை Bin Card Details படி தேதி 01.06.2023 முன்பு வரை 200KVA/22KV மின் மாற்றி இருப்பு 'NIL' Stock என்பதும் Bin Card details மூலமும் தெரிய வருகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மின்மாற்றி கட்டமைப்பு வேலைகள் அனைத்தும் 17.04.2023 தேதியில் முடிவடைந்து அன்றைய தினமே மின்மாற்றி 200KVA/22KV ஒதுக்கீடு கேட்டு பிரிவு அலுவலகத்திலிருந்து மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக 17.06.2023 அன்று மாலை மின்மாற்றி மேற்பார்வை பொறியாளர் /விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் / விழுப்புரம் அவர்கள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், 18.06.2023 அன்று வார விடுமுறை என்பதால் 19.06.2023 அன்று பண்டகசாலையிலிருந்து 200KVA/22KV மின்மாற்றியை எடுத்து வந்து கட்டமைப்பில் பொருத்தும் பணி முடிக்கப்பட்டதாகவும், அன்றைய தினமே (19.06.2023), மின் இணைப்பு கொடுக்க வேண்டி (LTCT service என்பதால்) MRT Wing நேரம் ஒதுக்கீடுக்கு ஏற்பாடு செய்யக்கோரி விண்ணப்பம் 19.06.2023 அன்று பிரிவு அலுவலகத்தில் இருந்து உதவி செயற்பொறியாளர் / கிராமம் / விழுப்புரம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும், 20.06.2023 அன்று உதவி செயற்பொறியாளர் / கிராமம் / விழுப்புரம் அலுவலகத்தில் இருந்து மேற்படி விண்ணப்பம் Counter Sign பெற்று உதவி செயற்பொறியாளர்/MRT/ விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேற்கண்ட MRT Wing ஆனது ஒரு வட்டத்திற்கு முழுவதற்கும் உண்டானது என்பதால் அவர்கள் பணி வரிசை Priority படி 22.06.2023 தேதி அன்று நேரம் ஒதுக்கீடு செய்து அன்றே மின் இணைப்பும் வழங்கப்பட்டதாகவும் மேலும், மத்திய பண்டக சாலையில் மின்மாற்றி இருப்பு இல்லாததாலேயே தாமதம் ஏற்பட்டுவிட்டதாகவும், வேறு எந்த ஒரு கால கட்டத்திலும் தாமதம் ஏற்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேற்பார்வை பொறியாளர் விழுப்புரம் அவர்களால் 03.06.2023 அன்று 5 Nos. 200KVA/22KV மின் மாற்றிகள் வட்டத்திற்குப்பட்ட பகுதிகளில் பழுதடைந்த 200KVA/22KV மின்மாற்றிகள் மாற்றுவதற்கு மட்டுமே நுகர்வோர்களின் மின்சார அவசர நிமித்தம் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இதன் படி 03.06.2023 முதல் 17.06.2023 முன்பு வரை எந்த ஒரு 200KVA/22KV மின்மாற்றியும் புதிய மின் இணைப்பிற்காக ஒதுங்கிடு செய்பப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 மேலும் 200KVA/22KV வைத்து பதிவு இணைப்புகள் வழங்க கால இடைவெளி என்பது இக்கோட்டத்திற்கு மட்டுமல்லாமல் விழுப்புரம் மண்டல்தில் உள்ள அனைத்து கோட்டத்திற்கும் இதே நிலை 200KVA/22KV மின் மாற்றி பற்றாக்குறை காரணமாக நீடித்தது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 மேற்பார்வை பொறியாளர் விழுப்புரம் அவர்களால் 03.06.2023 முதல் 17.06.2023 முன்பு வரை எந்த ஒரு 200KVA/22KV மின்மாற்றியும் புதிய மின் இணைப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும், மேலும் 200KVA/22KV வைத்து புதிய மின் இணைப்புகள் வழங்க கால இடைவெளி என்பது இக்கோட்டத்திற்கு மட்டுமல்லாமல் விழுப்புரம் மண்டத்தில் உள்ள அனைத்து கோட்டத்திற்கும் இதே நிலை 200KVA/22KV மின் மாற்றி பற்றாக்குறை காரணமாக நீடித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு.ஜி.மதன் அவர்கள் தொழிற்சாலை மின் இணைப்பு வேண்டி 04-03-2023 தேதியில் விண்ணப்பம் செய்து அதற்கான கட்டணம்

அனைத்தையும் செலுத்தியுள்ளதாகவும், தாழ்வழுத்த மின் இணைப்பு மின்மாற்றி அமைத்து அளித்திட அதிகபட்சம் 90 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், கால அவகாசம் என்பது அந்த குறிப்பட்ட காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை குறிக்கிறதாகவும், குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் மின் இணைப்பு வழங்காமல் 22.06.2023 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.3 முறைப்படி குறிப்பிட்ட காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்படாமல் அதிகபட்ச அவகாசமான 90 நாட்களையும் கடந்து 18 நாட்கள் தாமதமாக 22.06.2023 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டதால் பெரும் பொருளிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் பெறப்பட்ட கடன் தொகைக்கு தொழில் செய்யாமலே வட்டி கட்டும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கபடாததற்கு இழப்பீடு வழங்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் திரு.G.மதன் 39/1.மாம்பழப்பட்டு ரோடு விழுப்புரம் அவர்களுக்கு சொந்தமான B7 ஜானகிபுரம் தொழிற்பேட்டை கண்டமானடி விழுப்புரம் என்ற இடத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு புதிய தொழிற்சாலை மின் இணைப்பு வேண்டி 04.03.2023 அன்று இணையவழி மூலம் விண்ணப்பித்ததாகவும், அந்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 06.03.2023 அன்று நேரடியாக கள ஆய்வு செய்து விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதாகவும், மேலும் 15.03.2023 அன்று விண்ணப்பத்திற்கு உரிய மதிப்பீடு தயார் செய்து மேல் அனுமதிக்காக அனுப்பப்பட்டு மதிப்பீட்டு அனுமதி 29.03.2023 அன்று கிடைக்கப்பெற்றதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 அதனை தொடர்ந்து புதிய மின் மாற்றி கட்டமைப்பு அமைக்கும் பணி தொடங்கி முடிக்கப்பட்டவுடன் புதிய மின் மாற்றி 200 KVA /22 KV ஒதுக்கீடு வேண்டி 17.04.2023 அன்று உதவி மின்பொறியாளர்/இ&ப/ஜானகிபுரம் அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டதாகவும், 17.06.2023 அன்று 200 KVA/22 KV மின் மாற்றி ஒதுக்கீடு பெறப்பட்டு 18.06.2023 அன்று வார விடுமுறை என்பதால் 19.06.2023 அன்று 200KVA/22KV மின் மாற்றி பண்டகச்சாலையிலிருந்து எடுத்து வரப்பட்டு

விண்ணப்பதாரரின் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்க புதியதாக அமைக்கப்பட்ட கட்டமைப்பில் நிறுவப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் 200KVA/22KV வைத்து புதிய மின் இணைப்புகள் வழங்க கால இடைவெளி என்பது தங்கள் கோட்டத்திற்கு மட்டுமல்லாமல் விழுப்புரம் மண்டலத்தில் உள்ள அனைத்து கோட்டத்திற்கும் இதே நிலை 200KVA/22KV மின் மாற்றி பற்றாக்குறை காரணமாக நீடித்ததாகவும், மேலும், மேற்பார்வை பொறியாளர்/விழுப்புரம் அவர்களால் 03.06.2023 அன்று 5 Nos. 200KVA/22KV மின் மாற்றிகள் வட்டத்திற்குப்பட்ட பகுதிகளில் பழுதடைந்த 200KVA/22KV மின்மாற்றிகள் மாற்றுவதற்கு மட்டுமே நுகர்வோர்களின் மின்சார அவசர நிமித்தம் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இதன் படி 03.06.2023 முதல் 17.06.2023 முன்பு வரை எந்த ஒரு 200KVA/22KV மின்மாற்றியும் புதிய மின் இணைப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்படயில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 19.06.2023 அன்றே LTCT மின் அளவி சோதனை செய்து மின் இணைப்பு வழங்க MRT பிரிவு அவர்களின் நேரம் ஒதுக்கீட்டிற்கு ஏற்பாடு செய்ய 19.06.2023 நாளிட்ட கடிதம் உதவி மின்பொறியாளர் பிரிவு அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டதாகவும், 20.06.2023 அன்று புதிய மின் மாற்றி கட்டமைப்புக்கும் அதில் நிறுவப்பட்ட மின் மாற்றிக்கும் தொடர்புடைய மின் விஸ்தரிப்பு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு மின் மாற்றி தயார் நிலையில் வைக்கப்பட்டதாகவும், 22.06.2023 அன்று MRT பிரிவு அவர்கள் நேரம் ஒதுக்கீடு செய்து LTCT மின் இணைப்பு வழங்க LTCT மின் அளவி தொடர்புடைய அனைத்து சோதனைகளையும் நிறைவு செய்து திரு.G.மதன். அவர்களின் தொழிற்சாலைக்கு மின்னிணைப்பு எண்.422-012-627 வழங்கப்பட்டதாகவும், இவ்வாறாக பணிகள் முடிக்கப்பட்டு மேல்முறையீட்டாளரின் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதே தவிர வேண்டுமென்றே காலதாமதம் செய்யப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இது சம்பந்தமாக மேல்முறையீட்டாளருக்கு காலதாமதமாக, தாழ்வழுத்த மின் இணைப்பு மின்மாற்றி அமைத்து அளித்திட வழங்கப்பட்ட கால அவகாசமான 90 நாட்கள் முடிவுற்ற பின்னர் 18 நாட்கள் கழித்து அதாவது 22.06.2023 அன்று தொழிசாலை மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதால் அதற்கான நஷ்டஈடாக ரூபாய் 1 லட்சம் இழப்பீடு

கோரப்பட்ட நிலையில் அதனை நுகர்வோர் குறைதீர் மன்றத்தால் நிராகரிக்கப்பட்டதாகவும் எனவே அதை வழங்குமாறு முறையிட்ட நிலையில் மேல்முறையீட்டாளர் கோரும் இழப்பீடு ஏற்புடையதா என்பதை ஆராய விரும்புகிறேன்.

7.9 மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தில் தமிழ்நாடு மின்சார பகிமான செயல்திற செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி நுகர்வோர்களின் குறைகளின் தன்மை அறிந்து ஆணை வழங்க முடியுமே தவிர நஷ்ட ஈடு மற்றும் மன உளைச்சல் போன்றவற்றிற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. மேலும் மேற்முறையிட்டாளர் தான் மின்மாற்றி தன் சொந்த செலவில் வாங்கி தருவதாக தெரிவித்தும் எதிர்மனுதாரர் கருத்தில் கோள்ளவில்லை என்ற வாதத்திற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பதால் அந்த வாதம் ஏற்றுகொள்ள இயலவில்லை.

7.10 இந்நிலையில் மேற்முறையீட்டாளருக்கு குறிப்பிட்ட காலகெடுவான 90 நாள்கள் கடந்து மேலும் 18 நாட்கள் கழிந்து மின் இணைப்பு மின்மாற்றி பெறப்பட்டு வழங்கபட்டதாக அறிய வருகின்றது. எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக நாம் அறிவது மேல்முறையீட்டாளர் தன்னுடைய தொழிற்சாலைக்கு புதிய மின் இணைப்பு வேண்டி 04.03.2023 அன்று இணையவழி மூலம் விண்ணப்பித்ததற்கு எதிர்மனுதாரர் 06.03.2023 அன்று நேரடியாக கள ஆய்வு செய்து விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு 15.03.2023 அன்று உரிய மதிப்பீடு தயார் செய்து மேல் அனுமதிக்காக அனுப்பப்பட்டு, மதிப்பீட்டு அனுமதி 29.03.2023 அன்று கிடைக்கப்பெற்று, புதிய மின் மாற்றி கட்டமைப்பு அமைக்கும் பணி தொடங்கி முடிக்கப்பட்டவுடன் புதிய மின் மாற்றி 200KVA/22KV ஒதுக்கீடு வேண்டி 17.04.2023 அன்று உதவி மின்பொறியாளர்/இ&ப/ஜானகிபுரம் அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டது தெரியவருகிறது.

7.11 மின்மாற்றி வழங்கப்படாததை தொடர்ந்து 15.05.2023 அன்று மேற்பார்வை பொறியாளரிடமிருந்து தலைமை பொறியாளர்/பகிர்மானம் அவர்களுக்கும், 16.05.2023 அன்று தலைமை பொறியாளர் பகிர்மானம் அவர்களிடமிருந்து தலைமை பொறியாளர் / Materials Management அவர்களுக்கும், மீண்டும் 15.06.2023 அன்று மேற்பார்வை

பொறியாளரிடமிருந்து தலைமை பொறியாளர் பகிர்மானம் அவர்களுக்கு நினைவூட்டல் கடிதமும் மின்மாற்றி ஒதுக்கீடு வேண்டி அனுப்பப்பட்டது தெரியவருகிறது. அதனை தொடர்ந்து 17.06.2023 அன்று 200 KVA/22 KV மின் மாற்றி ஒதுக்கீடு பெற்று 18.06.2023 அன்று ஞாயிற்று கிழமை என்பதால் 19.06.2023 அன்று 200KVA/22 KV மின் மாற்றி பண்டகச்சாலையிலிருந்து எடுத்துவரப்பட்டு MRT பிரிவினரின் சோதனைக்கு பின் விண்ணப்பதாரரின் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்க புதியதாக அமைக்கப்பட்ட கட்டமைப்பில் நிறுவப்பட்டு மின் விஸ்தரிப்பு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 22.06.2023 அன்று மின் இணைப்பு எண் 422-012-627 வழங்கப்பட்டது தெரியவருகிறது.

7.12 மேலும் 200KVA/22KV மின்மாற்றி வைத்து புதிய மின் இணைப்புகள் வழங்க விழுப்புரம் மண்டலத்தில் உள்ள அனைத்து கோட்டத்திற்கும் மின் மாற்றி பற்றாக்குறை நீடித்ததாகவும், இதன் படி 17.06.2023 முன்பு வரை எந்த ஒரு 200KVA/22KV மின்மாற்றியும் புதிய மின் இணைப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பது எதிர்மனுதாரர் சமர்ப்பித்த மத்திய பண்டக சாலை Bin Card details-இன் மூலம் 200KVA/22KV மின்மாற்றி 'NIL' stock என்பது உறுதி செய்யப்படுகிறது. எனவே, 17.06.2023 அன்று 200 KVA/22 KV மின் மாற்றி ஒதுக்கீடு பெறப்பட்டதை தொடர்ந்து 19.06.2023 அன்று 200KVA/22 KV மின் மாற்றி பண்டகச்சாலையிலிருந்து எடுத்து வரப்பட்டு 22.06.2023 அன்று LTCT மின் இணைப்பு வழங்கப்பட்டது தெரிகிறது. மேற்கூரிய எதிர்மனுதாரரின் தொடர் நடவடிக்கையின் மூலம் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கும் செயல்பாட்டில் எந்தவிதமான சுணக்கம் இருந்தாக தெரியவில்லை.

7.13 மேலும், இது சம்பந்தமாக தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 27(I)-யை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"27. விதி விலக்குகள்***
> *I. இந்த ஒழுங்குமுறை விதியில் குறித்துரைக்கப்பட்ட செயல்திறச் செந்தரங்கள், தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலைகளின் போது அல்லது உரிமம்தாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள நிலையின் போது நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும்."*

7.14 மேற்கண்ட விதியின்படி ஒழுங்குமுறை விதியில் குறித்துரைக்கப்பட்ட செயல்திறச் செந்தரங்கள், தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலைகளின் போது அல்லது உரிமம்தாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள நிலையின் போது நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும் என அறியமுடிகிறது. இவ்வழக்கை பொறுத்தவரை கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி அந்த காலகட்டத்தில் மேல்முறையீட்டாளருக்கு மட்டும் மின் இணைப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படவில்லை எனவும், மேலும் 200KVA/22KV மின் மாற்றி கையிருப்பு இல்லாத நிலையில்தான் மின்னிணைப்பு வழங்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டது என்றும் முன்னுரிமை அடிப்படையிலேயே பணிகள் நடைபெற்றதும் அறிய முடிகிறது.

7.15 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி, மேல்முறையீட்டாளர் 04.03.2023-இல் விண்ணப்பம் பதிவு செய்த நிலையில் மின்மாற்றி கட்டமைப்பு வேலைகள் அனைத்து 17.04.2023 தேதியில் முடிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்க 200KVA/22KV மின் மாற்றி கையிருப்பு இல்லாத நிலையில்தான் மின்னிணைப்பு வழங்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டது என்றும் வேண்டுமென்றே காலதாமதம் செய்யப்படவில்லை என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் இழப்பீடு சம்பந்தமான கோரிக்கை ஏற்புடையதாக இல்லை என தீர்வு செய்யப்படுகிறது.

## 8.0 முடிவுரை:

8.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி எதிர்மனுதாரரின் தொடர் நடவடிக்கையின் மூலம் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கும் செயல்பாட்டில் எந்தவிதமான சுணக்கம் இருந்தாக தெரியவில்லை. மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்றே காலதாமதம் செய்யப்படவில்லை என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு கோரும் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை என்பதால் நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.70/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1) திரு G. மதன், – By RPAD
39/1, மாம்பலப்பட்டு ரோடு,
விழுப்புரம் மாவட்டம் – 605 002.

2) செயற்பொறியாளர்/ இ&ப/ விழுப்புரம்,
விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10, பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம் – 605 602.

3) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / கிராமம்/ விழுப்புரம்,
விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
401, 1, ADL வளாகம், திருச்சி மெயின் ரோடு,
வழுத்தாரேட்டி, விழுப்புரம் – 605 602.

4) உதவி மின்பொறியாளர்/ இ&ப / ஜானகிபுரம்,
விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஆவின் பால் நிலையம் அருகில், விழுப்புரம்.

5) மேற்பார்வை பொறியாளர், - By email
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
**10,** பழைய பவர் ஹவுஸ் ரோடு, விழுப்புரம் **– 605 602.**

**6.** தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144,** அண்ணாசாலை, சென்னை – **600 002.**

7. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.